**உமது வட்டாரத்தில் சிறந்த சமூகச் சேவை ஆற்றிய ஒருவருக்கு, 'சிறந்த சமூகச் சேவையாளர்' எனும் விருது அளித்துக் கௌரவிக்கின்றனர். அதனையொட்டி நடைபெறும் ஒரு நிகழ்வில் குடியிருப்புச் சங்கத் தலைவர் என்ற முறையில் வாழ்த்துறை வழங்க வேண்டும். அந்த உரையில் விடுப்பட்ட சொற்களைக் கொண்டு பூர்த்தி செய்க.**

அவைத் தலைவர் அவர்களே, மரியாதைக்குரிய திரு. மாறன் அவர்களே, ________________________________, சகோதர சகோதரிகளே, உங்கள் அனைவருக்கும் என் வணக்கம். இந்நிகழ்வில் சேவையாளர் திரு.மாறனைக் குறித்து பேச வாய்ப்புக் கிடைத்ததற்காகப் பெருமைப்படுகிறேன்.

திரு.மாறன் அவர்களுக்குச் 'சிறந்த சமூகச் சேவையாளர்' என்ற விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளது நாம் அனைவரும் ______________________வேண்டிய ஒன்றாகும். திரு.மாறன் நம் குடியிறுப்புப் பகுதியைச் சேர்ந்த ______________________________ ஆவார். இவர் சேவையை இவ்வாட்டாரம் மட்டுமின்றி மாநிலமே நன்கு அறியும்.

பெரியோர்களே,

வேண்டியவர் வேண்டாதவர் என்ற பேதமின்றி, உதவி தேவைப்படும் அனைவருக்கும் ________________________ நீட்டுபவர் திரு.மாறன் அவர்கள். வறுமையில் வாடும் பல குடும்பங்களின் துயரம் இவர் உதவியால் சூரியனைக் கண்ட பனிபோல மறைந்துள்ளது. நம் குடியிருப்புப் பகுதியில் பொதுமண்டபம், நூலகம் ஆகியவை இவர் முயற்சியினால் ______________________________. வெள்ளிக்கிழமை தோறும் இவர் நடத்திவரும் சமய

LIVEWORKSHEETS

வகுப்பு நம்மிடையே ________________________________ உருவாக்கியுள்ளதை யாரும் மறுக்க முடியாது.

சகோதர சகோதரிகளே,

இவர் சேவையை மதித்து, நம் மாநிலத் தமிழ்க்கலை, பண்பாடு இயக்கம் இவருக்குச் 'சிறந்த சமூகச் சேவையாளர்' விருது வழங்கியிருப்பது, இவர் சேவைக்குக் கிடைத்த ஓர் ________________________________ ஆகும். திரு.மாறனைப் போன்ற தன்னலமற்ற ________________________________ நமது மத்தியில் பலர் உருவாக வேண்டும்.

திரு.மாறன் மேன்மேலும் சமூகத்திற்குச் சிறப்பாகச் சேவை செய்ய ஆண்டவன் அவருக்கு நீண்ட ஆயுளை வழங்க வேண்டும் என்று வேண்டிக்கொண்டு, என் உரையை முடிக்கிறேன்.

நன்றி, வணக்கம்.

| | |
|---|---|
| சயமப் பற்றை | மண்ணின் மைந்தர் |
| அங்கீகாரம் | சேவையாளர்கள் |
| உருவானவையே | உதவிக் கரம் |
| பெரியோர்களே | பெருமைப்பட |

LIVEWORKSHEETS